**ருவன்வெல்ல பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 மே 12 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 444,304 ஆன சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | முன் கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கு மீதி ரூபா 327,347 இனை காரணத்தை கண்டு உறுதிப்படுத்திக் கொள்ளாது திரண்ட நிதியத்தினூடாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | இனங்கண்டு கணக்குகளிற்கு சீராக்கி சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக மாதாந்தம் தயாரிக்கப்பட்ட வருமான மற்றும் செலவின பகுப்பாய்வின் பிரகாரம் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 908,929 மற்றும் ரூபா 1,665,795 ஆன போதும் பேரேட்டில் அவை முறையே ரூபா 1,574,254 மற்றும் ரூபா 1,577,543 ஆகக் குறிப்பிட்டதால் முற்பணக் கணக்கு மீதி ரூபா 753,577 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு செலவின பகுப்பாய்வு பிரகாரம் கடன்கொடுனர் கொடுப்பனவு ரூபா 13,263,183 ஆன போதும் பேரேட்டில் அது ரூபா 13,351,543 ஆக குறிப்பிடப்பட்டதால் கடன்கொடுனர் மீதி ரூபா 88,360 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (உ) | தின வருமான பொழிப்பு பதிவேட்டின் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கான பெறுவனவு ரூபா 167,719 ஆன போதும், பேரேட்டில் அது ரூபா 2,691,008 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய செலவினங்களிற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய வேண்டும். | கணக்காய்வினால் தொகையை அறிவிக்காததால் கடன்கொடுனர் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யவில்லை எனவும், பாதீட்டினூடாக கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கப்பட்டுள்ளதால் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஊழியர் கடன் வங்கிக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டில் கடன் கொடுப்பனவு ரூபா 7,263,710 ஆன போதும், கடன் கணக்கில் அது ரூபா 7,624,904 ஆகக் காட்டப்பட்டதால் ரூபா 361,194 ஆன வித்தியாசம் காணப்பட்டது. அதே போன்று ரூபா 7,624,904 தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்துள்ளதால் திரண்ட நிதியத்தின் மீதி அப் பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | நிதி நிலைமைக் கூற்றின் 13 ஆம் குறிப்பு பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 59,689,780 ஆன போதும் நிதி நிலைமைக் கூற்றினுள் அது ரூபா 62,279,780 என காட்டப்பட்டதால் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 2,590,000 கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்காக காரணத்தை கண்டு சீராக்கம் செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் 10 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோக பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 3,388,918 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளுடன் இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஒ) | பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 05 விடயங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 128,443,354 ஆன போதும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 131,890,409 ஆனதில் ரூபா 3,447,055 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றை இணக்கஞ் செய்து வித்தியாசத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஓ) | மீளாய்வாண்டில் நூலக புத்தகக் கொள்வனவு ரூபா 879,168 என கணக்கீடு செய்யப்பட்ட போதும், | நிதிக்கூற்றை தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | நூலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவனை பிரகாரம் கொள்வனவு மற்றும் அன்பளிப்பு ரூபா 491,998 ஆனதில் ரூபா 387,170 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | அட்டவணையுடன் இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். | அறிவிக்கிறேன். |
| (ஔ) | மூலதனத்திலிருந்து வருமானத்திற்கு பங்களிப்புக் கணக்கு மற்றும் நிலையான சொத்து கூட்டுப் பெறுமதிக்கிடையில் ரூபா 167,760 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,900,227 ஆன மீள் செலுத்தாத வைப்புகள், நானாவித வைப்புகள் மற்றும் டென்டர் பிணை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதியில் அரச வருமானத்ததிற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,519,782 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,478,780 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் வரி | 6,222,042 | 5,880,164 | 5,326,792 | 3,531,435 | 3,187,000 | 4,259,303 | 3,102,285 | 1,157,018 |
| ii | வாடகை | 16,506,032 | 16,002,053 | 14,302,363 | 7,103,965 | 9,041,200 | 12,339,336 | 8,574,231 | 3,765,105 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 795,100 | 848,449 | 848,449 | 29,745 | 610,100 | 677,460 | 677,460 | - |
| iv | ஏனைய வருமானம் | 21,111,000 | 21,641,566 | 37,430,077 | 35,637,169 | 72,954,800 | 66,077,240 | 45,929,762 | 20,147,480 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி**<br>மீளாய்வாண்டு இறுதித் திகதியில் ரூபா 3,468,458 ஆன வீதவரி மீதியினுள் 02 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 836,576 தொகை காணப்பட்டது. நிலுவை மீதியை அறவிட 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை பதிவழிக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க உள்ளதாகவும் ஏனைய நிலுவையை அறவிடவதற்காக ஆதனங்களை இரத்துச் செய்தல் மற்றும் நடமாடும் சேவைகளை செயற்படுத்துவதாகவும் அறிவிக்கிறேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் நிலுவை ஏக்கர் வரி ரூபா 62,977 ஆனதுடன் அவற்றினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 55,862 தொகை உள்ளடங்கியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்காக வருமான பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் பொது மலசல கூட வாடகை மற்றும் இறைச்சிக் கடை, மீன் கடை வாடகை மற்றும் தண்டப்பண மீதி ரூபா 1,719,052 ஆனதுடன் அவற்றில் 04 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் ரூபா 861,538 தொகை உள்ளடங்கி இருந்தது | நிலுவை வாடகையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | பொது மலசல கூடம், இறைச்சிக் கடை மற்றும் மீன் கடை நிலுவை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கபடுவதாக அறிவிக்கிறேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,735,590 ஆனது. | வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை அழைப்பித்துக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குப்பைக் கொட்டிலினுள் பசளை உற்பத்தி செய்து எஞ்சுகின்ற உக்கலடையா பொருட்களை தனியார் காணியொன்றிற்கு வெளியிட நடவடிக்கை எடுத்திருந்ததுடன் சுகாதார ரீதியான நில நிரப்புதலிற்காக காணியொன்றை சுவீகரித்திருந்த போதும் அது தொடர்பான முன் நடவடிக்கைகளிற்காக கருத்திட்ட உத்தேசமொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபையிற்கு சமர்பித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் விசாரித்து இது தொடர்பாக பொருத்தமான நடைமுறையொன்றை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார ரீதியான நில நிரப்புதல் ஒன்றிற்காக காணியொன்றை சுவீகரித்துள்ளதுடன், அது தொடர்பான முன் நடவடிக்கைகளிற்காக கருத்திட்ட உத்தேசமொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபையிற்கு சமர்பித்த போதும் அதற்காக பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | குப்பை கொட்டிலிற்காக நிரந்தர நீர் வழங்கலொன்று இருக்காததுடன், 2014 ஆண்டு பொருத்தப்பட்ட ஹலர் இயந்திரம் மும்முக மின் விநியோகம் இல்லாததால் விளைவற்று காணப்பட்டது. அதே போன்று மலக் கழிவு மீள்சுழற்சி கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தியாகாததால் கழிவுகளை வெறியிடும் வசதிகள் | ஹலர் இயந்திரத்தை உற்பத்திக்காக பயன்படுத்த, மலக் கழிவு மீள்சுழற்சி கருத்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதை துரிதப்படுத்தல் | திண்மக் கழிவு மத்திய நிலையத்திற்கு அருகில் மலக் கழிவு மீள்சுழற்சி கருத்திட்டம் நிர்மாணிக்கப்படுவதால் வெளியிடப்படும் நீரை கழிவுக் கொட்டிலிற்கு பயன்படுத்திக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் |

| | | |
|---|---|---|
| இல்லாத நுகர்வோர்களிற்கு கலி சேவையை வழங்க முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டும். | மலசல கழிவுளை வெளியிட இடமுள்ளவர்களுக்கு தொடர்ந்து கலி சேவையை வழங்குவதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவம் செயற்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியல் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 59,689,780 ஆனதுடன் அவற்றில் 02 ஆண்டுகளை விஞ்சிய கடன்கொடுனர் மீதிகள் ரூபா 15,433,989 ஆனபோதும் இது வரை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பழைய கடன்கொடுனர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாண்டு இறுதிக்கு முன்னர் கடன் கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஆளணியில் 10 வகை பதவிகளில் 17 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 05 வகை பதவிகளில் 23 மிகையும் காணப்பட்டன. | முக்கிய வெற்றிடங்ளை நிரப்புதலும் மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ள அல்லது ஆளணியை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | பிரதேச சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு பிரதானமாக தாக்கம் செலுத்தும் செயலாளர் பதவி 2011 மார்ச் 31 | முக்கிய பதவி வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாளர் பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் முகாமை சேவை பெண் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்தும், பட வரைஞர் பதவி 2015 செப்டம்பர் 23 திகதியிலிருந்தும், நூலக அதிபர் பதவி 2013 ஜனவரி 01 திகதி முதல் மற்றும் பொது வியாபார நிலைய நிர்வாகத்தர் பதவி 2018 மார்ச் 01 திகதியிலிருந்தும் வெற்றிடமாக காணப்பட்டன. | | ஏனைய பதவிகளிற்காக சேவை ஒப்பந்தம் மூலமேனும் ஆட்சேர்க்கப்படவில்லை என அறிவிக்கிறேன். |
| (இ) | இடமாற்றம் பெற்று சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற, 06 ஊழியர்கள் இடமிருந்து 2002 பெப்ரவரி முதல் 2013 ஆண்டு வரை காலத்திற்குரிய அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 80,150 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் xxiv பிரிவின் 4.3, 4.4, 4.5 மற்றும் 4.6 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு ஊழியர் பற்றிய தகவல்களை பரிசோதிக்க காலமொன்று தேவை எனவும், இன்னுமொறு ஊழியர் பற்றிய தகவல்களை கண்டறிய முடியாது எனவும், எஞ்சிய ஊழியர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் அறவிட சட்ட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தவிசாளரிற்கு உள்ளூராட்சி அதிகார எல்லைக்கு வெளியிலான கடமைக்கு மாத்திரம் இனைந்த படிகள் செலுத்த முடியுமான போதும் அதனை உறுதி செய்து கொள்ளாது மீளாய்வாண்டு ஜுன், ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களிற்குரிய 120 நாட்களிற்காக ரூபா 120,000 ஆன இனைந்த படிகள் செலுத்ப்பட்டிருந்ததுடன் அதனுள் அலுவலகத்தில் கடமையாற்றிய தினங்களும் உள்ளடங்கியிருந்தன. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் இனைந்த படிகள் செலுத்த வேண்டும். | தவிசாளரிற்கு அலுவலகத்தில் தங்கியிருந்த சில தினங்களிற்காக போக்கு வரத்து செலவுகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இத் தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாகவும் குறைபாடுகள் ஏற்படாதவாறு ஓட்டக் குறிப்புகளை எழுதுவதற்கு உரிய சாரதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசத்திற்கு மகுடம் கருத்திட்டத்தின் கீழ் 2014 நிர்மாணிக்கப்பட்ட புதிய வாராந்த சந்தை கடைகளை உரிமையாளர்களிற்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய வாராந்த சந்தையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய வாராந்த சந்தையை தேர்தல் முடிவடைந்தவுடன் திறக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சுற்றறிக்கை இலக்கம் 08/2010 – 07 பிரிவின் பிரகாரம் சுடுகாடுகளின் உரிமை, நிலையான தன்மை, பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடடை ஒழுங்கமைக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சுடுகாடுகள் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

### 3.5.3 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த 18 செலவு விடயங்களில் ரூபா 82,086,939 ஆன மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தன. | திட்டமிடலிற்கமைய ஒதுக்கீடு ஏற்பாடு செய்யவும், அவ் ஒதுக்கீட்டை வினைத்திறனாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டு பாதீடு தயாரிக்கும் போது இவ்வாறான தலைப்புகளை ஒதுக்கிவிட நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அனைத்து உப கட்டுநிதிகளும் குறித்த ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய போதும் 2001 ஆண்டிற்கு முன்னரிலிருந்து கணக்குகளில் முன்கொண்டுவரப்படும் ரூபா 625,651 தொகை மேலும் 2014 மற்றும் 2018 ஆண்டு காலத்திற்கிடையில் தீர்க்கப்படாத ரூபா 187,889 ஆன முற்பாணம் 2020 ஜுன் வரை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2001 ஆண்டிற்கு முன்னரிலிருந்து கணக்குகளில் முன்கொண்டுவரப்படும் ரூபா 625,651 தொகையை ஏடுகளிலிருந்து பதிவழிக்க அனுமதியை பெற்றுக் கொள்ள சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |